இந்துகலாபிவிருத்திச் சங்க இலவச வெளியீடு 5.

அருணகிரிநாத சுவாமிகள்

அருளிச்செய்த

# கதிர்காமத்திருப்புகழ்.



இந்துகலாபிவிருத்திச் சங்கம்,

ஜிந்தும்பிட்டித் தெரு,

கொழும்பு.

பவ ௵ ஆடி ௴.



சுப்பிரமணியக் கடவுள், அருணகிரிநாதருக்கு உபதேசித்தல்.

உ

சிவமயம்.

# அருணகிரிநாத சுவாமிகள் அருளிச் செய்த

# கதிர்காமத் திருப்புகழ்.

இந்துகலாபிவிருத்திச்சங்க

இலவச வெளியீடு—5

3074

இந்துகலாபி விருத்திச்சங்கம்,

ஜிந்துப்பிட்டித் தெரு.

கொழும்பு.

பவ ௵ ஆடி ௴



சுப்பிரமணியக் கடவுள்.

உ

சிவமயம்.

அருணகிரிநாதசுவாமிகள் அருளிச்செய்த

# கதிர்காமத் திருப்புகழ்.

௧ தனதனன தான தனதனன தான
தனதனன தான தானத் தனதான.

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக னாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே.

௨ தனன தான தானான தனன தான தானான
தனன தான தானான தனதான.

அலகின் மாறு மாருத கலதி பூத வேதாளி
அடைவில் ஞாளி கோமாளி அறமீயா
அழிவு கோளி நாணாது புழுகு பூசி வாழ்மாதர்
அருளி லாத தோடோய மருளாகி
பலக லாக ராமேரு மலைக ராச லாவீசு
பருவ மேக மேதாரு வெனயாதும்
பரிவு றாத மாபாதர் வரிசை பாடி யோயாத
பரிசில் தேடி மாயாத படிபாராய்

இலகு வேலை நீள்வாடை யெரிகொள் வெலை மாசூரி
லெறியும் வேலை மாருத திறல்வீரா
இமய மாது பாகீர திநதி பால காசார
விறைவி கான மால்வேடர் சுதைபாகா
கலக வாரி போல்மோதி வடவை யாறு சூழ்சீத
கதிர காம மூதூரில் இளையோனே
கனக நாடு வீடாய கடவுள் யானை வாழ்வான
கருணை மேருவே தேவர் பெருமாளே

௩. தனன தான தத்த தனதான தனன தான தத்த தனதான.

எதிரி லாத பத்தி தனைமேவி இனிய தாணி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்குள் றவாகி எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர காம வெற்பி லுறைவோனே கனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே வழுதி கூனி மிர்த்த பெருமாளே

௪ தனதன தனதன தனதன தனதன
தானத் தனந்த தனதான.

கடகட வருவிகள் தபவரி யதிர்கதிர்
காமத் தரங்க மலைவீரா
கனகத நககுவி புணரித குணகுக
காமத் தனஞ்சம் புயனோடை
வடசிக ரகிரித விடுபட நடமிடு
மாவிற் புகுங்கந் தவழாது
வழிவழி தமரென வழிபடு கிலனென
வாவிக் கினம்பொன் றிடுமோதான்
அடவியி ருடியபி நவகும ரியடிமை
யாயப் புனஞ்சென் றயர்வோனே
அயிலவ சபரிசெய் கவிபுகல் தருகவி
யாளப் புயங்கொண்ட ருள்வோனே
இடமொரு மரகத மயிலிசை வடிவுள
ஏழைக் கிடங்கண் டவர்வாழ்வே
இதமொழி பகரினு மதமொழி பகரினும்
ஏழைக் கிரங்கும் பெருமாளே.



௫ தனனதன தானத்த தனனதன தான
தனனதன தானத்த தனதான தானனா.

சமரமுக வேலொத்த விழிபுரள வாரிட்ட
தனமசைய வீதிக்குள் மயில்போலு லாவியே
சரியைக்ரியை யோகத்தின் வழிவருக்கு பாசுத்தர்
தமையுணர ராகத்தின் வசமாக மேவியே
உமதடியு ரூருக்கு மனுமரண மாயைக்கு
முரியவர்ம காதத்தை யெணுமாய மாதரார்
ஒளிரமளி பீடத்தி லமடுபடு வேனுக்கு
மூனதருள்கிரு பாசித்தம் அருள்கூர வேணுமே
இமகிரிகு மாரத்தி யநுபவைப ராசத்தி
எழுதரிய காயத்ரி யுமையாள்கு மாரனே
எயினர்மட மானுக்கு மடலெழுதி மோகித்து
இதணருகு சேவிக்கு முருகாவி சாகனே
அமரர்சிறை மீள்விக்க அமர்செய்துப்ர தாபிக்கு
மதிகவித சாமர்த்ய கவிராஜ ராஜனே
அழுதுலகை வாழ்வித்த கவுணியகு லாதித்த
அரியகதிர் காமத்தில் உரியாபி ராமனே.

௬ தனத்தா தனத்தா தனத்தா தனத்தா
தனத்தா தனத்தா தனதான.

சரத்தே யுதித்தா யுரத்தே குதித்தே
சமர்த்தா யெதிர்த்தே வருசூரைச்
சரிப்போ னமட்டே விடுத்தா யடுத்தாய்
தகர்த்தா யுடற்றான் இருகூறாச்
சிரத்தோ டுரத்தோ டறுத்தே குவித்தாய்
செகுத்தாய் பலத்தார் விருதாகச்
சிறைச்சே வல்பெற்றாய் வலக்கார முற்றாய்
திருத்தா மரைத்தாள் அருள்வாயே
புரத்தார் வரத்தார் சரச்சே கரத்தார்
பொரத்தா னெதிர்த்தே வருபோது


பொறுத்தார் பரித்தார் சிரித்தார் எரித்தார்
பொரித்தார் நுதற்பார் வையிலேபின்
கரித்தோ லுரித்தார் விரித்தார் தரித்தார்
கருத்தார் மருத்தூர் மதனரைக்
கரிக்கோ லவிட்டார் கணுக்கா னமுத்தே
கதிர்க்கா மமுற்றூர் முருகோனே.


௭ தனதன தத்தனத் தனதன தத்தனத்
தனதன தத்தனத் தனதான.

சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகலயோ கர்க்குமெட் டரிதாய
சமயபே தத்தினுக் கணுகொண மெய்ப்பொருட்
டருபரா சத்தியிற் பரமான
துரியமே லற்புதப் பரமஞா னத்தனிச்
சுடர்வியா பித்தநற் பதிநீடு
துகளில்சா யுச்சியக் கதியையீ றற்சொற்
சுகசொரூ பத்தையுற் றடைவேனோ
புரிசைசூழ் செய்ப்பதிக் குரியசா மர்த்யசற்
புருஷவீ ரத்துவிக் ரமசூரன்
புரளவேல் தொட்டகைக் குமரமேன் மைத்திருப்
புகழையோ தற்கெனக் கருள்வோனே
கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
கனிகள்பீ றிப்புசித் தமராடிக்
கதலிசூ தத்தினிற் பயிலுமீ ழத்தினிற்
கதிரகாம மக்கிரிப் பெருமாளே.

௮ தானதன தத்தத்த தானதன தத்தத்த
தானதன தத்தத்த தனதான.

பாரவித முத்தப்ப டாபுள கப்பொற்ப
யோதரநெ ருக்குற்ற இடையாலே





ஸ்ரீ கதிர்காம க்ஷேத்திரம்.



பாகளவு இத்தத்த கீதமொழி யிற்புட்ப
பாணவிழி யிற்பொத்தி விடுமாதர்
காரணிகு ழற்கற்றை மேல்மகர மொப்பித்த
காதில்முக வட்டத்தில் அதிமோக
காமுகன கப்பட்ட வாசையைம றப்பித்த
கால்களைம றக்கைக்கும் வருமோதான்
தேரிரவி யுட்கிப்பு காமுதுபு ரத்திற்றெ
சாசிரனை மர்த்தித்த அரிமாயன்
சீர்மருக அத்யுக்ர யானைபடும் ரத்நத்ரி
கோணசயி லத்துக்ர கதிர்காம
வீரபுன வெற்பிற்க லாபியெயி னச்சிக்கு
மேகலையி டைக்கொத்தின் இருதாளின்
வேரிமழை யிற்பச்சை வேயிலரு ணக்கற்றை
வேல்களில கப்பட்ட பெருமாளே.

தனதன தத்த தனதன தத்த
தனதன தத்த தனதான

மருவரு வெற்றி மலர்தொடா விற்கை
வலிசெயா நிற்கு மதனாலும்
மதில்கள்தா வுற்ற கலைபடா வட்ட
மதிசுடா நிற்கு மதனாலும்
இருகணால் முத்த முதிரயா மத்தி
னிரவினால் நித்த மெலியாதே
இடருறு மெத்த மயல்கொளா நிற்கு
மிவளைவாழ் விக்க வரவேணும்
கரிகள்சேர் வெற்பி லரியவே டிச்சி
கலவிகூர் சித்ர மணிமார்பா
கனகமா ணிக்க வடிவனே மிக்க
கதிரகா மத்தில் உறைவோனே
முருகனே பத்த ரருகனே முத்தி
முதல்வனே பச்சை மயில்வீரா

முடுகிமே விட்ட கொடியசூர் கெட்டு
முறியவேல் தொட்ட பெருமாளே.

௰ தானதன தானத் தனதான தானதன தானத் தனதான.

மாதர்வச மாயுற் றுழல்வாரும் மாதவமெ ணாமற் றிரிவாரும்
தீதகல வோதிப் பணியாரும் தீநரக மீதிற் றிகழ்வாரே
நாதவொளி யேநற் குணசீலா நாரியிரு வோரைப் புணர்வேலா
சோதிசிவ ஞானக் குமரேசா தோமில்கதிர் காமப் பெருமாளே.

௧௧ தனன தான தான தத்த தனன தான தான தத்த
தனன தான தான தத்த தனதான.

முதிரு மார வார நட்பொ டிலகு மார வார மெற்றி
முனியு மார வார முற்ற கடலாலே
முடிவி லாத தோர்வ டக்கில் எரியு மால் மார்பி டத்து
முழுகி யேறி மேலெ றிக்கு நிலவாலே
வெதிரி லாயர் வாயில் வைத்து மதுர ராக நீடி சைக்கும்
வினைவி டாத தாய ருக்கு மழியாதே
விளையு மோக போக முற்றி யளவி லாத காதல் பெற்ற
விகட மாதை நீய ணைக்க வரவேணும்
கதிர காம மாந கர்க்கு ளெதிரி லாத வேல்த ரித்த
கடவு ளேக லாப சித்ர மயில்வீரா
கயலு லாம்வி லோச னத்தி களப மார்ப யோதரத்தி
ககன மேவு வாளொ ருத்தி மணவாளா
அதிர வீசி யாடும் வெற்றி விடையி லேறு மீசர் கற்க
அரிய ஞான வாச கத்தை யருள்வோனே
அகில லோக மீது சுற்றி யசுரர் லோக நீறெ ழுப்பி
அமரர் லோகம் வாழ வைத்த பெருமாளே.

# ஸ்தோத்திரத்திரட்டு.

## புதிய பதிப்பு.

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், திருப்புகழ், திருமந்திரம், பதினோராந்திருமுறை, திருமொழி, கந்தரலங்காரம், பட்டிணத்தார் பாடல், இராமலிங்கசுவாமி பாடல் முதலியவற்றினின்றும் திரட்டிய அரிய தோத்திரப்பாக்களும், விநாயகரகவல், கந்தர்சஷ்டி கவசம், திருவெம்பாவை, திருப்பொற் சுண்ணம் முழுவதும்,

சுருக்கமான ஆலயதரிசன விதியும் அடங்கியுள்ளது.

**அழகிய படங்களுடன்**

நேர்த்தியான பைண்ட் செய்யப்பெற்றது.

விலை சதம் **30.**

—(o)—

**இந்துகலாபிவிருத்திச் சங்கம்,**

ஜிந்தும்பிட்டித் தெரு,

கொழும்பு.

ஸ்டான்லி பிரஸ், கொழும்பு